செய்தி வெளியீடு எண்: 683 நாள்: 20.09.2018

**செய்தி வெளியீடு**

**தமிழ்நாட்டைச் சேர்ந்த மேசைப்பந்து விளையாட்டு வீரர் திரு. G.சத்தியன், அவர்களுக்கு மத்திய அரசு அர்ஜுனா விருது வழங்கியதையடுத்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (20.9.2018) திரு. G.சத்தியன் அவர்களுக்கு அனுப்பிய வாழ்த்து கடிதத்தின் விபரம்:**

“சர்வதேச அளவில் மேசைப்பந்து விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு, பல பதக்கங்களை வென்று இந்திய நாட்டிற்கும், தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்த்துள்ள தங்களுக்கு இந்திய அரசு அர்ஜுனா விருது வழங்கி கௌரவித்துள்ளதற்கு எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்களை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த தருணத்தில் தாங்கள் மேசைப்பந்து போட்டிகளில் மேன்மேலும் பல வெற்றிகளைக் குவித்து சாதனை சிகரங்களைத் தொட எனது அன்பான நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.”

*******

**வெளியீடு : இயக்குநர், செய்தி - மக்கள் தொடர்புத் துறை, சென்னை .9.**